[1987 நவம்பர் 16

2. நத்தம் புறம்போக்கு நிலங்களை பலர் ஆக்கிரமிப்பு செய்ததினால் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், விடுதிகளுக்கு நிலங்கள் கிடைக்கவில்லை என்பது குறித்து அரசுக்கு முறையீடு ஏதும் வரப்பெறவில்லை.

3. ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், விடுதிகள் ஏற்படுத்த எந்த ஊரில் நத்தம் புறம்போக்கு நிலங்கள் தேவைப்பட்டு அது கிடைக்காமல் மற்றவர் ஆக்கிரமித்துள்ளனர் என்று அரசுக்கு தெரிவித்தால் இது குறித்து தக்க மேல் நடவடிக்கையை அரசு எடுக்கும்.

(ஈ) குறிஞ்சிப்பாடி ஒன்றியம், பெருமாள் ஏரிக்கு தண்ணீர் வரும் வாய்க்கால் தூர்ந்துள்ளது குறித்து.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குறிஞ்சிப்பாடி ஒன்றியப் பகுதியிலுள்ள பெருமாள் ஏரிக்குத் தண்ணீர் வரும் வாய்க்காலில் காட்டாமணி செடி வளர்ந்து வாய்க்கால் தூர்ந்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

வாலாஜா ஏரியின் உபரி நீர்க்கால்வாயான பெருவளூர் கால்வாய் பெருமாள் ஏரியின் முக்கிய வரத்துக்கால் ஆகும். பெருமாள் ஏரியினை அடையும் முன் சுமார் 4 கி.மீ. நீளத்திற்கும் இக்கால்வாயினில் காட்டு இலாக்காவினர் கருவேல மரங்களை 6 வருடங்களுக்கு முன் நட்டு, அவைகள் வளர்ந்து நீர்வரத்தை பாதிக்கின்றன. இது தவிர சீமைக் காட்டாமணி செடிகளும் வளர்ந்து கால்வாய் தூர்ந்துபோய் உள்ளது. இப்பொருள் சம்பந்தமாக 9/86-லேயே காட்டு இலாக்காவிற்கு தெரியப்படுத்தி, 4—11—1986-ல் பொதுப்பணித்துறை மற்றும் வன அதிகாரிகள் தலத்தினை கூட்டாகப் பார்வையிட்டுள்ளனர். மரங்களை அப்புறப்படுத்த 29—10—1987-லும் மாவட்ட வன அலுவலர் நினைவூட்டப்பட்டு இருக்கிறார். செயற் பொறியாளர் அவர்களை இது குறித்து மீண்டும் வன இலாக்கா அலுவலருடன் கலந்து பேசி, மரங்களை நீக்க நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டுள்ளார். மரங்களை அப்புறப்படுத்திய பின், சீமைக்காட்டாமணிச் செடிகளையும் சேர்ந்துள்ள தூரையும் கனரக இயந்திரங்களின் உதவியுடன் நீக்கப்படும்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே பொதுப்பணித் துறைக்கு சம்பந்தமான பெருமாள் ஏரியில் 1-4-1986-ல் வனத் துறை அதிகாரிகளும், பொதுப்பணித் துறை அதிகாரிகளும் இருவரும் சேர்ந்து ஆய்வு நடத்தியதாகவும், அந்த ஆய்வு 1986 ஆம் ஆண்டு நடைபெற்றதாகவும் அதற்குப் பிறகு இரண்டு துறையில் இருக்கின்ற அதிகாரிகளும் 29-10-1987-ல் அந்த வரத்துக் கால்வாயில் மரங்களும், செடிகளும் அடைத்து இருப்பதால் அதை அகற்ற நடவடிக்கை எடுத்து உடனடியாக அந்த வரத்து வாய்க்காலில் உள்ள மரங்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று முடிவு எடுத்து இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே விரைவில் அந்த வாய்க்காலில் உள்ள அந்த மரங்களை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்து இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே விரைவாக அந்த நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் அங்கே அடைப்பட்டுக் கொண்டு இருந்த அந்த சீமை காட்டாமணி செடிகளையும், வனத்துறையால் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்ற அந்த மரங்களையும் மிக விரைவாக அகற்ற வேண்டும் என்று சொல்லி அதிகாரிகளுக்கு உத்திரவு இடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவில் நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மிகவும் நன்றி. ஆகவே இந்த மரம் மாத்திரம் அந்த வரத்து வாய்க்காலை அடைத்திருப்பது ஒரு காரணம் அல்ல. அந்த பெருமாள் ஏரிக்கு வரக்கூடியவரத்து வாய்க்காலின் இரண்டு பக்கத்திலும் கரைகள் இல்லை. அப்படிக் கரைகள் இல்லாததனாலேயும் இந்த மரம் அடைத்திருப்பதனாலேயும் அருகாமையிலே இருக்கின்ற புவனகிரி தொகுதியின் தென் பகுதியிலேயும், வடபகுதியிலே உள்ள குறிஞ்சிப்பாடி பகுதியிலேயும் வெள்ளக் காலங்களில் பாதிப்பு ஏற்படுகின்றது. கரைகள் இல்லாமல் இருப்பதனாலேயே வெள்ளக் காலங்களில் பல கிராமங்கள் சேதமடைகின்றன. ஆகவே இப்படி பல கிராமங்கள் சேதப்படுகின்றதைத் தவிர்க்கின்ற வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஆண்டு பல நேரங்களில் நான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். ஆகவே வருகின்ற ஆண்டாவது இருபுறங்களிலும் கரையை அமைத்து வெள்ளக் காலங்களில் கிராமங்களில் பாதிப்புஏற்படுவதைத்தடுக்கும் வகையிலும்,

ஏரிக்கு வரத்து வரக்கூடிய வகையிலேயும் அதை அமைத்துத் தர உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளோடு பேசி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) வைகை ஆற்றின் கரையில் காமராஜர் பாலம் நுழைவு வாயிலையொட்டி அமைந்துள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் இடிந்துள்ளதால் வீடுகள் பாதிப்பு.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம், சோழவந்தான், வைகை ஆற்றின் கரையில் காமராஜர் பாலம் நுழைவு வாயிலை ஒட்டி அமைந்துள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் இடிந்துள்ளது. இதனால் ஆற்றில் தண்ணீர் பெருக்கு ஏற்படும்போது அருகில் உள்ள வீடுகள் பாதிக்கப்படுவதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

மதுரை மாவட்டம், சோழவந்தான் பேரூராட்சி பராமரிப்பிலுள்ள சாலையான தென்கரை அணுகு சாலை (கி.மீ. 0/0—0/8)-யில் கி.மீ. 0/2-ல் வைகை ஆற்றின் குறுக்கே மூழ்கு பாலம் ஒன்றுள்ளது. 1979 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணப் பணிகள் திட்டத்தின் மூலமாக மேற்படி மூழ்கு பாலமும், இப்பாலத்தின் இடது பக்கம் ஆற்றின் கீழ் புறம் சுமார் 31.0 மீட்டர் தடுப்பு சுவருடன் நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்பட்டது. 1982 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் மேற்படி தடுப்புச் சுவர் சுமார் 9.00 மீட்டர் நீளத்திற்கு சரிந்தும் அதற்கடுத்த 22.0 மீட்டர் நீளத்திற்கு முழுவதுமாக சேதமடைந்து விட்டது. அது இது நாள் வரை சீர்செய்யப்படவில்லை.

2. தடுப்புச் சுவரை சீர்செய்து திரும்பக் கட்டுவதற்கு தோராயமாக ரூ. 1.30 லட்சம் தேவைப்படும் என்றும், இத் தொகையினை சோழவந்தான் பேரூராட்சி செலுத்தினால், இப்பணியை வைப்புப் பணியாக (Deposit work) எடுத்துச் செய்யப்படும் என்று தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி) தெரிவித்துள்ளார்.